Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349



# தமிழ் மக்கள் குரல்

தினசரி காலை நாளிதழ்

tamilmakkalkurall@gmail.com

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி






மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், செப்டம்பர் 17, 2026 | இதழ் 157


## லண்டனில் முதல்வர் விஜய் ரசிகர்களை சந்திக்கும் நிகழ்ச்சி பாதுகாப்பு காரணங்களால் ரத்து

சென்னை, 17 செப்டம்பர் 2026: லண்டனில் முதல்வர் விஜய் ரசிகர்களை சந்திக்கும் நிகழ்ச்சி பாதுகாப்பு காரணங்களால் ரத்து செய்யப்பட்டது.

தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, லண்டன் சென்றுள்ள முதல்வர் விஜய், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். இந்தப் பயணத்தின் போது, ரூ.12,300 கோடி மதிப்பிலான முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, லண்டனில் மிக உயரமான கட்டடமான தி ஷார்ட் முன்பு, பொதுவெளியில் முதல்வர் விஜய், ரசிகர்களை சந்திக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால், அவரைக் காண அளவுக்கு அதிகமாக கூட்டம் கூடியது. இதனால், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை காரணமாக, முதல்வர் விஜய் பங்கேற்க இருந்த இந்த நிகழ்ச்சியை போலீசார் ரத்து செய்தனர். இது அவரை காண்பதற்காக திரண்டிருந்த ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. பாதுகாப்பு தொடர்பான காரணங்களால், போலீசாரின் அனுமதி இல்லாததால், இந்த நிகழ்ச்சி ரத்து செய்யப்படுவதாக முதல்வர் குழுவினர் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பை வெளியிட்டனர்.

மேலும் விஜய் தங்கியுள்ள ஓட்டல் முன்பு குவிந்த ரசிகர்கள்




செயலால் லண்டன் வாழ் தமிழர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். கெத்து காட்டுவதற்காக லண்டனில் ரசிகர்களை திரட்டி உள்ளூர் மக்களுக்கு தவெக தொல்லை கொடுப்பதாக புகார் அளித்துள்ளனர். லண்டன் போலீஸ் அனுமதி பெறாமல் விஜய் தங்கியுள்ள ஓட்டல் முன்பு ரசிகர்களை தவெக திரட்டியதாக புகார் அளித்தனர்.

திரைத்துறையில் 30 ஆண்டுகாலம் இருந்த விஜய் லண்டனுக்கு பல முறை வந்துள்ளார். முன்பு விஜய் பயணம் ரகசியமாக வைக்கப்பட்ட நிலையில், தற்போது திட்டமிட்டு தகவல் பரப்பப்படுவதாக லண்டன் வாழ் தமிழர் புகார் அளித்துள்ளனர். தவெக செயலால் லண்டன் மக்கள் மத்தியில் இந்தியர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

## செமிகான் இந்தியா 2026 மாநாட்டைப் பிரதமர் செப்டம்பர் 17 புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்

சென்னை 17, செப்டம்பர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி செமிகான் இந்தியா 2026 மாநாட்டை 2026 செப்டம்பர் 17 அன்று புதுதில்லி யசோபூமியில் காலை 10 மணியளவில் தொடங்கி வைக்கிறார். பின்னர், அங்குக் கூடியிருப்பவர்களிடையே உரையாற்றவுள்ளார்.

2026 செப்டம்பர் 17 முதல் 19-ம் தேதி வரை மூன்று நாட்கள் இந்த மாநாடு மற்றும் கண்காட்சி நடைபெறவுள்ளது. இது செமிகண்டக்டர் மற்றும் மின்னணு துறையைச் சேர்ந்த உலகளாவிய, இந்திய நிறுவனங்கள், கொள்கை வகுப்பாளர்கள், மூதலீட்டாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், புத்தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், மாணவர்கள் ஆகியோரை ஒன்றிணைக்கும்.

இம்மாநாடு இந்தியாவில் ஒருங்கிணைப்பு,




முதலீடு, புதுமைக் கண்டுபிடிப்பு, திறன் மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்வது ஆகியவற்றில் கவனம் செலுத்தும். இதன் இணை அமர்வுகளில் காட்சித் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், ஒத்துழைப்பு, கூட்டு முயற்சிகளை எளிதாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட 6 நாடுகளின் வட்ட மேசை மாநாடுகள், மகளிர் தலைமைத்துவம் குறித்த கருத்தரங்கம் உள்ளிட்டவை இடம் பெறும்.

இம்மாநாட்டில் 600-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கின்றன. அத்துடன் 52 நாடுகளின் பிரதிநிதிகள், 400-க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், 150-க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் ஆகியோர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.






## "எதற்கும் லாயக்கற்ற தவெக அரசு"; மக்களை திசைதிருப்ப ரெய்டு என்ற அஸ்திரத்தை ஏவியுள்ளது - திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்

சென்னை, 17 செப்டம்பர் 2026: திமுக முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மீதான ரெய்டானது, தவெக அரசின் மற்றுமொரு திசைதிருப்பும், அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் கண்டனம் தெரிவித்து உள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் மின்வெட்டினால் பாதிக்கப்படும் மக்களின் போராட்டங்கள், பட்டினப்பாக்கம் மீனவர்கள் போராட்டம், நேபாளத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் உரிய பதில் கிடைக்காமல் தலைமைச் செயலகம் முன் போராட்டம், ஆவின் பால் தட்டுப்பாட்டால் மக்கள் பரிதவிப்பு, ராமநாதபுரம் இரட்டைக் கொலை, சென்னையில் பிள்ளையார் சதுர்த்தி ஊர்வலத்தில் அரசுப் பேருந்து ஓட்டுநர் அடித்துக் கொலை, அயனாவரத்தில் பெண் காவலரிடம் த.வெ.க. நிர்வாகி சீண்டல் என மாநிலத்தை உலுக்கி கொண்டிருக்கும் மக்கள் பிரச்சனைகள் எதையுமே கண்டுகொள்ளாமல் லண்டனில் ஷூட்டிங் நடத்தி கொண்டிருக்கிறார் முதலமைச்சர்.

இப்படி மேற்கண்டது போல பல முக்கிய பிரச்சினைகளைச் சரிசெய்ய




முடியாத விரக்தியில், மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் மீது ரெய்டு என்ற அஸ்திரத்தை ஏவியுள்ளது எதற்கும் லாயக்கற்ற த.வெ.க. அரசு.

இந்த அப்பட்டமான அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையைச் சட்டரீதியாக நாங்கள் எதிர்கொள்வோம். எதிர்க்கட்சி மீது ரெய்டு நடத்துவதால் மக்கள் கோபத்தைத் தணிக்க முடியாது.

பொய்யான குற்றச்சாட்டுகளும் சட்டத்தின் முன் நிலைக்காது என்பதை இந்த அரசு விரைவில் உணரும் என்றும் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டு உள்ளார்.

## "குறுகிய காலத்தில் ராஜினாமா செய்வது ஓட்டளித்த மக்களை அவமானப்படுத்தும் செயல்". மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலுக்கு தடை இல்லை : சென்னை ஐகோர்ட் உத்தரவு

சென்னை 17, செப்டம்பர் 2026: மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலுக்கு தடை விதிக்க கோரியும், தேர்தல் முடிவுகள் வெளியான குறுகிய காலத்தில், மக்கள் தீர்ப்பை புறக்கணித்து அரசியல் காரணங்களுக்காக எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ததால், இடைத்தேர்தலில் அவர்கள் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்யும்போது, தேர்தல் செலவை டெபாசிட் செய்யும் வகையில் உரிய நடைமுறையை வகுக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி சென்னை சைதாப்பேட்டையை சேர்ந்த வக்கீல் சுதன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் பொது நல வழக்கு தாக்கல் செய்தார்.

அதில், இந்த வழக்கு முடியும் வரை மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த தடை விதிக்க வேண்டும் என்றும் இந்த தொகுதிகளுக்கு தவெக வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் எம்எல்ஏக்கள் மரகதம் குமாரவேல் மற்றும் சத்தியபாமா ஆகியோரின் வேட்பு மனுக்களை ஏற்க தேர்தல் ஆணையத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், கிருஷ்ணசாமி கோவிந்தராஜன் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், எந்த காரணமும் இல்லாமல் குறுகிய காலத்தில் ராஜினாமா செய்ததால், இடைத்தேர்தல் நடத்த வேண்டிய சூழல் எழுந்து, மீண்டும் செலவு செய்ய வேண்டிய நிலை வந்துள்ளது. வாக்களித்த மக்களின் விரல் மை காய்வதற்கு முன், ராஜினாமா செய்து இன்னொரு தேர்தலை சந்திக்க வைத்துள்ளனர். மக்களின் நம்பிக்கை வீழ்த்தப்பட்டுள்ளது. அரசிய சாசனத்தின் படி, இதுபோன்ற சூழலில் தேர்தல் ஆணையம் முறைபடுத்தலாம், ஐகோர்ட்டும் உத்தரவு பிறப்பிக்கலாம், என்பதால் இந்த வழக்கில் தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும். இடைத்தேர்தலுக்கு தடை விதிக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

அப்போது நீதிபதிகள், எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்ய முழு உரிமை உள்ளது. மக்கள் வாக்கு செலுத்தி தேர்ந்தெடுக்கப்பட்டவர், உரிய காரணங்கள் இல்லாமல் எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்ததன் மூலமாக மக்கள் அவமதிக்கப்பட்டுள்ளனர். இது கேலிக்கூத்தானது. இது போன்ற சூழலை எதிர்கொள்ள தேர்தல் ஆணையத்திடம் விதிமுறைகள் ஏதேனும் உள்ளதா? மக்களின் உரிமையை தேர்தல் ஆணையம் பாதுகாக்க வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால், இடைத்தேர்தலுக்கு தடை விதிக்க முடியாது என்றனர். தேர்தல் ஆணையம் தரப்பில், தற்போது எழுந்துள்ள சூழல் தொடர்பாக விரிவாக ஆய்வு செய்து பதிலளிக்க அவகாசம் வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான அட்வகேட் ஜெனரல், தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்கூட, இடைத்தேர்தலில் போட்டியிட முடியும் என சுட்டிக்காட்டினார். மேலும், ஏற்கெனவே எம்.எல்.ஏ.க்களின் ராஜினாமாவை ஏற்றதை எதிர்த்த வழக்கில் தலைமை நீதிபதி அமர்வு தீர்ப்பை தள்ளிவைத்துள்ளது என்று தெரிவித்தார். இதையடுத்து இந்த வழக்கை தலைமை நீதிபதி அமர்வுக்கு மாற்றம் செய்த நீதிபதிகள், விசாரணையை 18-ந்தேதிக்கு தள்ளிவைத்தனர்.

## "மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆவது முழுமையான குணமடைதலை குறிக்காது": முதியோர் குணமாவதில் கவனம் செலுத்தாத நிலையை புதிய பிரச்சாரம் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டு வரும் அந்தரா கேர் ஹோம்ஸ் மற்றும் நடிகை பிரியாமணி

சென்னை 17, செப்டம்பர் 2026: மேக்ஸ் இந்தியா லிமிடெட்டின் ஒரு அங்கமான அந்தரா கேர் ஹோம்ஸ், தேசிய விருது பெற்ற நடிகை பிரியாமணியுடன் இணைந்து "ஹோஸ்ப்பிட்டல் டிஸ்சார்ஜ் டஸ் நாட் மீன் ரிகவர்டு" என்ற தனது புதிய டிஜிட்டல் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது. முதியோர்கள் மற்றும் அவர்களைப் பராமரிப்பாளர்கள் சந்திக்கும் மிகவும் அலட்சியப்படுத்தப்பட்ட தேவைகளில் ஒன்றான, 'மருத்துவமனைக்கு பிந்தைய குணமடைதல்' குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதை இந்தப் பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பெரிய அளவிலான அறுவை சிகிச்சைகள், தீவிர சிகிச்சைகள், மாரடைப்பு, பக்க வாதம் அல்லது பிற நரம்பியல் பிரச்சனைகளிலிருந்து மீண்டு வரும் முதியோர்களுக்கு, மருத்துவமனையிலிருந்து வீடு திரும்புவது என்பது அவர்களின் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதைக் குறிக்காது. இந்த இடைப்பட்ட காலம் பெரும்பாலும் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அபாயத்தையும், பக்க விளைவுகளையும் கொண்டிருக்கக்கூடும். அந்தரா கேர் ஹோம்ஸின் இந்த புதிய பிரச்சாரம், மருத்துவமனை டிஸ்சார்ஜிற்கும் முழுமையான குணமடைதலுக்கும் இடைப்பட்ட இந்த முக்கியமான கட்டத்தைக் குறிவைக்கிறது. முதியோர்களும் அவர்களது குடும்பத்தினரும் மனரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் மிகவும் பலவீனமாக இருக்கும் இந்த காலக் கட்டத்தை உணர்ந்து, சரியான ஆதரவையும் பராமரிப்பையும் பெற குடும்பங்களுக்கு இது அழைப்பு விடுக்கிறது.

அந்தரா அசிஸ்டெட் கேர் சர்வீசஸின் (தலைமை செயல் அதிகாரி (சிஇஓ) இஷான் கண்ணா கூறுகையில், "ஒரு முதியவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ்



செய்யப்படுவது நிம்மதியைத் தரும் வேளையில், அதுவே அவர்களின் குணமடைதல் பயணத்தின் மிகவும் சவாலான ஒரு கட்டத்தின் தொடக்கமாகவும் அமையலாம். போதுமான பயிற்சியோ அல்லது வீட்டின் சூழலில் அதற்கான வசதிகளோ இல்லாத நிலையிலும், தங்களது வேலைகளுக்கு இடையே முதியவர்களுக்கான மருந்துகள், தொற்றுகள் மேலாண்மை, பிசியோதெரபி, உடல் இயக்கம் மற்றும் அன்றாட நடவடிக்கைகளுக்கான உதவிகள் என அனைத்தையும் கவனித்துக் கொள்ளும் பராமரிப்பாளர்களாக குடும்பத்தினர் ஒரே இரவில் மாற வேண்டியுள்ளது. இந்த இடத்தில்தான் சீரான மருத்துவமனைக்குப் பிந்தைய பராமரிப்பு அல்லது இடைக்கால பராமரிப்பு (டிரான்ஸிஷன் கேர்) ஒரு அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இந்தப் பிரச்சாரத்தின் மூலம், 'குணமடைதல்' என்பதற்குத் தனி திட்டமிடலும் பராமரிப்பும் தேவை என்பதையும், உண்மையில் மருத்துவமனை டிஸ்சார்ஜிலிருந்தே தொடங்குகிறது என்பதையும் குடும்பங்கள் உணர வேண்டும் என விரும்புகிறோம். அந்தரா கேர் ஹோம்ஸ் மருத்துவர்களின் மேற்பார்வை, செவிலியர் பராமரிப்பு, பல்துறை மறுவாழ்வுப் பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வசதிகளை ஒன்றிணைத்து வழங்குகிறது. இது முதியவர்கள் மீண்டும் நல் ஆரோக்கியம், வலிமை மற்றும் தற்சார்பைப் பெற உதவுவதுடன், நிபுணர்களின் ஆதரவோடு குணமடையும் நம்பகமான சூழலைப் பராமரிப்பாளர்களுக்கு உறுதி செய்கிறது." என்றார்.

## அதிர்ச்சி சம்பவம்..! சர்வதேசக் கடல்பகுதியில் இந்தியக் கப்பல் மீது மோதிய பாகிஸ்தான் போர்க்கப்பல்

சென்னை 17, செப்டம்பர் 2026: அரபிக்கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய கடற்படையின் போர்க் கப்பல் மீது பாகிஸ்தான் நாட்டின் போர்க்கப்பல் மோதிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. நேற்று மாலை அரபிக்கடலில் இந்த சம்பவம் நடந்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இந்த சம்பவம் குறித்து தகவல் தெரிவித்துள்ள இந்திய கடற்படை அதிகாரிகள், ஓமனுக்கு கிழக்கே சுமார் 220 கி.மீ தொலைவில் உள்ள வட அரபிக்கடல் சர்வதேச கடல் பகுதியில் இந்தியாவின் போர் கப்பல் ரோந்து சென்று கொண்டிருந்தது.

இந்தியப் போர்க் கப்பல் சர்வதேச கடல் பகுதியில் கண்காணிப்பில் இருந்த போது, பாகிஸ்தானின் ஆஃப்ஷோர் பேட்ரோல் கப்பலான PNS Hunain மிக அதிவேகமாக நம் நாட்டின் போர் கப்பலை நோக்கி வந்துள்ளது. கடல்சார் அவசரத் தொடர்பு அலைவரிசையான சேலஞ்சர் 16 மூலம் இந்தியத் தரப்பில் இருந்து தொடர்ந்து எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. ஆனால் அந்த எச்சரிக்கைகளையும் மீறி, பாகிஸ்தான் கப்பல் திடீரென வேகத்தை அதிகரித்து, இந்தியக் கப்பலின் வலதுபுறமாக குறுக்கே வந்து மோதியது. பாகிஸ்தான்



கப்பலின் முன்பகுதி இந்தியப் போர்க்கப்பல் மீது உரசிச் சென்றது. இதில் அதிர்ஷ்டவசமாக இந்தியக் கப்பலுக்கு எந்தவித கட்டமைப்புச் சேதமோ, கடற்படை வீரர்களுக்குக் காயங்களோ அல்லது செயல்பாட்டுப் பாதிப்போ ஏற்படவில்லை. இந்தியக் கப்பல் தொடர்ந்து தனது பணியை மேற்கொண்டது. இந்த நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக புதுடெல்லியில் உள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் (எம்இஏ), பாகிஸ் தான் தூதரகப் பொறுப்பாளர் சாத் அகமது வாரிச்சை நேரில் அழைத்து தனது கடுமையான கண்டனத்தை முறைப்படி தெரிவித்தது. ராணுவப் பயிற்சிகள் மற்றும் நடமாட்டங்கள் குறித்து இரு நாடுகளுக்கும் இடையே ஏப்ரல் 1991-ஆம் ஆண்டில் போடப்பட்ட இருதரப்பு ஒப்பந்தத்தின் ஆர்டிகிள் 10 ஆஃப் ஏப்ரல் 1991 அக்ரீமெண்ட்-ஐ பாகிஸ்தான் நேரடியாக மீறியுள்ளதாக இந்தியா சுட்டிக் காட்டியுள்ளது.

## Bauma CONEXPO இந்தியா 2026-இல் தனது அடுத்த தலைமுறை ஒருங்கிணைந்த பாகங்களை டாடா மோட்டார்ஸ் காட்சிப்படுத்தியுள்ளது

சென்னை 17, செப்டம்பர் 2026: இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக வாகன தயாரிப்பாளர் மற்றும் போக்குவரத்துத் தீர்வுகளை வழங்கும் நிறுவனமான டாடா மோட்டார்ஸ், Bauma CONEXPO இந்தியா 2026-இல் அடுத்த தலைமுறை ஆக்ரிகேட்ஸ்களின் விரிவான போர்ட்ஃபோலியோவைக் காட்சிப்படுத்தியது. இதில் 10 கேவிஏ முதல் 125 கேவிஏ வரையிலான சிபிசிபி 4+ (சென்ட்ரல் பொல்யூஷன் கன்ட்ரோல் போர்ட் 4+) விதிமுறைகளுக்கு உட்பட்ட டாடா மோட்டார்ஸ் ஜென்செட்டுகள், 0.7எல் முதல் 3.3எல் வரையிலான அதிக செயல்திறன் கொண்ட தொழிற்துறை எஞ்சின்கள் மற்றும் இந்தியாவின் முதல் அதிக உள்ளூர்மயமாக்கப்பட்ட ஹப் ரிடக்ஷன் ஆக்ஸிலான ஹெச்ஆர் 210 Live Axle ஆகியவை அடங்கும். இந்தத் தீர்வுகள் பொருள் கையாளுதல், கட்டுமான உபகரணங்கள், தொழிற்துறை பயன்பாடுகள் மற்றும் தளவாடத் துறைகளின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன, மேலும் கடுமையான கட்டுமான சூழல்களில் அதிக நம்பகத்தன்மை, அதிக திறன் மற்றும் நீடித்து உழைக்கும் தன்மையை வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சி குறித்துப் பேசிய டாடா மோட்டார்ஸ் கமர்ஷியல் வெகிக்கிள்ஸ்-ன் பாகங்கள் மற்றும் தொகுப்புப் பொருட்கள் வணிகப் பிரிவுத்



தலைவர் திரு. விக்ரம் அகர்வால் அவர்கள், "Bauma CONEXPO என்பது டாடா மோட்டார்ஸ்-ன் ஆக்ரிகேட்ஸ் போர்ட்ஃபோலியோவின் ஆழத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு சிறந்த தளமாகும்.

கடுமையான இயக்க நிலைமைகளிலும் செயல்படும் வகையில் இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட எஞ்சின்கள், ஜென்செட்டுகள், ஆக்ஸில்கள் போன்ற உலகத் தரம் வாய்ந்த இன்ஜினியரிங் திறன்களை நாங்கள் இந்தியாவில் உருவாக்கியுள்ளோம். இந்தத் துறை தொடர்ச்சியான மற்றும் தீவிரமான திட்டச் சுழற்சிகளை நோக்கி நகர்ந்து வரும் நிலையில், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் நம்பியிருக்கக்கூடிய தீர்வுகள் தேவைப்படுகின்றன. எங்களின் ஆக்ரி கேட்ஸ் போர்ட் ஃபோலியோவைப் பலப்படுத்துவதிலும், பல்வேறு பயன்பாடுகளில் எங்களின் இருப்பை விரிவாக்குவதிலும், சிறந்த திறனுடன் கூடிய பாதுகாப்பான தயாரிப்புகளை வழங்குவதிலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்" என்று கூறினார்.

## சாம்சங் இந்தியா 2026 பெஸ்போக் ஏஐ வீட்டு உபயோகப் பொருட்களை அறிமுகப்படுத்துகிறது; வீடுகளை மேலும் ஸ்மார்ட்டாகவும் இணைந்ததாகவும் மாற்றுகிறது

கோயம்புத்தூர் 17, செப்டம்பர் 2026: சாம்சங் இந்தியா தனது 2026 பெஸ்போக் ஏஐ வீட்டு உபயோகப் பொருட்களின் புதிய வரிசையை இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. செயற்கை நுண்ணறிவு (ஏஐ), தனிப்பயனாக்கப்பட்ட அனுபவங்கள் மற்றும் ஸ்மார்ட்திங்க்ஸ் இணைப்பு மூலம் அன்றாட வீட்டு செயல்பாடுகளை மேலும் எளிமையாகவும் வசதியாகவும் மாற்றும் வகையில் இந்த புதிய தயாரிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. 'The Brief Gurugram' நிகழ்வில் இந்த புதிய தயாரிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.

புதிய வரிசையில் கூகுள் ஜெமினி தொழில்நுட்பத்துடன் கூடிய ஏஐ விஷன் கொண்ட ஃபேமிலி ஹப் ரெஃப்ரிஜிரேட்டர், பெஸ்போக் ஏஐ விண்ட்ஃப்ரீ புரோ ஏர் கண்டிஷனர் மற்றும் விண்ட்ஃப்ரீ தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய இன்ஃபினிட் 1-வே கேசட் ஏசி ஆகியவை இடம்பெற்றுள்ளன. ஃபேமிலி ஹப் ரெஃப்ரிஜிரேட்டர்-ல் வீடியோ-டு-ரெசிபி, ஃபேமிலி கேர் மற்றும் பெட் கேர் போன்ற அம்சங்கள் உள்ளன. பெஸ்போக் ஏஐ விண்ட்ஃப்ரீ புரோ ஏசி, ஏஐ கட்டுப்பாடுகளுடன் பிஎம்1.0 காற்று சுத்திகரிப்பு வசதியையும் வழங்குகிறது. இன்ஃபினிட் 1-வே கேசட் ஏசி, 23,000 மைக்ரோ-ஹோல்ஸ் மூலம் காற்றின் நேரடி தாக்கம் இல்லாத குளிரூட்டலை வழங்குவதுடன், ஏஐ எனர்ஜி மோட் மூலம் மின்சார பயன்பாட்டை 30% வரை குறைக்க உதவுகிறது.

சாம்சங்-ன் ஏஐ ஹோம் ஸ்கிரீன், மேம்படுத்தப்பட்ட பிக்ஸ்பை வாய்ஸ் அசிஸ்டென்ட், ஸ்மார்ட் திங்க்ஸ் மற்றும் நாக்ஸ்



செக்யூரிட்டி ஆகியவற்றின் மூலம் புதிய பெஸ்போக் ஏஐ எகோசிஸ்டம் பயனர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, அவர்களின் தினசரி பழக்கங்களுக்கு ஏற்ப செயல்பட்டு, வீட்டு உபயோகப் பொருட்களை ஒன்றோடொன்று இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வாய்ஸ் ஐடி, ஃபேமிலி கேர், பெட் கேர், ஏஐ எனர்ஜி மோட் மற்றும் வியரபிள் குட் ஸ்லீப் போன்ற அம்சங்கள் தனிப்பயனாக்கப்பட்ட ஸ்மார்ட் ஹோம் அனுபவத்தை மேலும் மேம்படுத்துகின்றன.

ஆதரவு வழங்கப்படும் சாதனங்களுக்கு ஸ்மார்ட்திங்க்ஸ் மூலம் 7 ஆண்டுகள் வரை சாஃப்ட்வேர் அப்டேட்ஸ் வழங்கப்படும்.

இன்ஃபினிட் 1-வே கேசட் ஏசி 3.5 கேடபிள்யு, 5.2 கேடபிள்யு மற்றும் 7.1 கேடபிள்யு கூலிங் கெபாசிட்டிஸ்-ல் கிடைக்கிறது. இதன் ஆரம்ப விலை ரூ.1,60,000 ஆகும். ஃபேமிலி ஹப்-ன் விலை ரூ.4,00,690 ஆகவும், பெஸ்போக் ஏஐ விண்ட்ஃப்ரீ புரோ ஏர் கண்டிஷனர்-ன் விலை ரூ.69,990 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அனைத்து தயாரிப்புகளும் நாடு முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட விற்பனை கூட்டாளர்கள் மூலம் கிடைக்கின்றன.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## தமிழ்நாட்டின் வளர்ந்து வரும் தொழில் மையங்கள் எளிய மக்கள் வீடு வாங்குவதற்கான புதிய வாய்ப்புகளை உருவாக்குகின்றன : ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ்

மதுரை 17, செப்டம்பர் 2026: உற்பத்தி, ஆட்டோ மொபைல் (வாகன உற்பத்தி), மின்னணுவியல் (எலக்ட்ரானிக்ஸ்), ஜவுளி, மருந்தகம் மற்றும் தளவாடங்கள் (லாஜிஸ்டிக்ஸ்) போன்ற தொழில்துறைகளில் தமிழ்நாடு சீரான வளர்ச்சியைப் பெற்று வருகிறது. நிறுவனங்கள் மாநிலத்தின் முக்கிய நகரங்களைத் தாண்டித் தங்கள் தொழிலை விரிவாக்கம் செய்வதாலும், சிறிய நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் புதிய தொழில் மற்றும் வேலைவாய்ப்பு மையங்கள் உருவாவதாலும், அதிகப்படியான குடும்பங்கள் வேலை தேடியும், சிறந்த வாழ்க்கைத் தரத்தை நோக்கியும் இந்த வாய்ப்புகளுக்கு அருகில் குடிபெயர்ந்து வருகின்றன.

அறிக்கைகளின்படி, நடப்பு நிதியாண்டில் (எஃப்ஒய்26) தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (ஜிஎஸ்டிபி) ரூ.35.29 லட்சம் கோடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உற்பத்தி, தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், போக்குவரத்து மற்றும் இதர துறைகளிலும் மாநிலம் முதலீடுகளை ஈர்த்து வருகிறது. இந்த வளர்ச்சியானது புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், வளர்ந்து வரும் பகுதிகளில் உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து இணைப்புகளின் மேம்பாட்டிற்கும் பக்கபலமாக அமைந்து வருகிறது.

இரண்டாம் நிலை (டயர் 2), மூன்றாம் நிலை (டயர் 3) நகரங்கள் மற்றும் பகுதி-நகரப் (செமி-அர்பன்) பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு, உள்ளூர் தொழில்துறைகளின் இந்த வளர்ச்சி என்பது தங்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே கூடுதல் வேலை வாய்ப்புகள் கிடைப்பதைக் குறிக்கிறது. வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் நிலையில், உற்பத்தித் துறை, தளவாடங்கள், சிறு வணிகங்கள் மற்றும் அது சார்ந்த சேவைத் துறைகளில் பணிபுரிபவர்கள், தங்களது பணியிடங்களுக்கு அருகிலேயே வீடுகளைத் தேடத் தொடங்கியுள்ளனர். முதன்முறையாக வீடு வாங்குபவர்கள் பலருக்கு, ஒரு நிலையான வருமானம் கிடைப்பது சொந்த வீடு வாங்குவதற்கான அடுத்த அடியை எடுத்து வைக்க கூடுதல் நம்பிக்கையை அளிக்கிறது.

மதுரை நகரம் தொழில்துறைகள் மற்றும் வேலைவாய்ப்பு மையங்களின் விரிவாக்கத்தைக் கண்டு வருகிறது; இது எளிய மக்கள் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கான மலிவு விலை வீட்டு வசதிக்கான கூடுதல் வாய்ப்புகளை உருவாக்குகிறது. இந்நகரிலுள்ள அதிகப்படியான குடும்பங்கள் தங்களது முதல் சொந்த வீட்டை வாங்க விரும்பும் வேளையில், எளிய முறையில் கிடைக்கும் வீட்டு வசதி கடன்கள் (ஹவுசிங் ஃபைனான்ஸ்) அவர்களின் இந்த லட்சியத்தை நனவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்க முடியும்.

இந்த வளர்ந்து வரும் வாய்ப்புகளைப் பிரதிபலிக்கும் விதமாக, ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ் நிறுவனம் தமிழ்நாட்டில் தனது கடன் வழங்கலில் (டிஸ்பர்ஸ்மெண்ட்ஸ்) 36% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது; இதன் மூலம் இம்மாநிலம் இந்நிறுவனத்திற்கான ஒரு முக்கிய சந்தையாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் இந்நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இது குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட குடும்பங்களிடையே வீட்டு வசதி கடன்களுக்கான தேவை அதிகரித்து வருவதைக் காட்டுகிறது. மாநிலம் முழுவதும் 35,000-க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்யும் 90 கிளைகளுடன், வளர்ந்து வரும் நகர்ப்புற, பகுதி-நகரப் பகுதிகள் மற்றும் இரண்டாம், மூன்றாம் நிலைச் சந்தைகளில் இந்நிறுவனம் தனது இருப்பைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.

## தனியார் பள்ளி நிர்வாகங்களிடம் அரசு அனுமதி பெற்று தருவதாக கூறி, பல கோடி மோசடி செய்த வழக்கில், சென்னை மற்றும் திருச்சியில் நடைபெற்ற சோதனையில் சொத்து ஆவணங்கள் மற்றும் மின்னனு ஆதாரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது

சென்னை 17, செப்டம்பர் 2026: தனியார் பள்ளி நிர்வாகங்களிடம் நிரந்தர அங்கீகாரம், பள்ளி தரஉயர்வு, டிடிசிபி அனுமதி மற்றும் இதர அரசு அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி, பல கோடி பணம் வசூலித்து மோசடி செய்ததாக அளித்த புகாரின்பேரில், சென்னை மத்திய குற்றப்பிரிவில் வழக்குப் பதிவு செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய பி.டி.அரசகுமார், சுரேஷ் மற்றும் ராஜா ஆகிய 3 எதிரிகள் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கின் விசாரணையின் தொடர்ச்சியாக சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவு காவல் குழுவினர், பல்வேறு நபர்களிடம் விசாரணை செய்து, ஆவணங்கள் மற்றும் மின்னணு ஆதாரங்களின் அடிப்படையில், அப்போதைய பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக இருந்த திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி என்பவர் மீது ஊழல் தடுப்பு சட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

நேற்று (16.09.2026) திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு சொந்தமான சென்னையில் 2 இடங்கள் மற்றும் திருச்சியில் 2 இடங்கள், இவரது உதவியாளர்களான வாலாடி கார்த்திக், அருண் பிரகாஷ் மற்றும் பிரகாஷ் ஆகியோருக்கு சொந்தமான இடங்கள் என மொத்தம் 9 இடங்களில் சென்னை, மத்திய குற்றப்பிரிவு போலீசாரால் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சோதனையில் சொத்து ஆவணங்கள், வங்கி விவரங்கள், காசோலைகள் ஆகியவற்றுடன் சேர்த்து வழக்கு சம்மந்தமாக 118 ஆவணங்கள், செல்போன்கள்-18, லேப்டாப்-3, பென்ட்ரைவ்-8, டெஸ்க்டாப் (இன்பில்ட் ஹார்ட் டிஸ்க்)-2, டேப்லட்-1, ஆப்பிள் ஐ பேட் -1 கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவு போலீசார் தொடர்ந்து, விசாரணை செய்து வருகின்றனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## அமெரிக்க அதிபர் டிரம்பின் மகன் திருமண கொண்டாட்ட செலவை ஏற்ற ரஷ்ய தொழிலதிபர்: உறுதி செய்த டிரம்ப் ஜூனியர், பெட்டினா தம்பதி



சென்னை 17, செப்டம்பர் 2026: பஹாமாஸ் தீவில் அமெரிக்க அதிபர் டிரம்பின் மூத்த மகன் டிரம்ப் ஜூனியருக்கும் சமூக ஆர்வலர் பெட்டினா ஆண்டர்சனுக்கும் இடையே நடந்த திருமணத்திற்கு சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் தலைவரும் ரஷ்ய தொழிலதிபருமான க்ரெம்லேவ் மிகப் பெரிய நிதியுதவியை அளித்ததாக புரோபப்ளிகா என்ற புலனாய்வு இணையதளம் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டு இருந்தது. மூன்று நாட்கள் நடந்த திருமண கொண்டாட்டங்களுக்காக இரண்டு தனியார் தீவுகளில் ஒன்றை வாடகைக்கு எடுத்தது மற்றும் வான வேடிக்கை நிகழ்ச்சி உள்ளிட்டவற்றுக்கான லட்சக்கணக்கான டாலர் மதிப்பிலான திருமணச் செலவுகளை தொழிலதிபர் க்ரெம்லேவ் ஏற்றுக்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்நிலையில் டொனால்ட் டிரம்ப் ஜூனியரின் மனைவியான பெட்டியானா கடந்த மே மாதம் நடந்த தங்களது திருமண வார இறுதி கொண்டாட்டங்களுக்கு நெருங்கிய தொடர்பு கொண்ட ஒரு நபர் நிதியுதவி அளித்ததாக ஒப்புக் கொண்டுள்ளார்.

தம்பதியினரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட பதிவில், "உமர் க்ரெம்லேவ் என்ற அந்த நபர் ஒரு அன்பிற்குரிய நண்பர். அவர்கள் எங்கள் திருமணத்துக்கு பிறகு எங்களுக்கான இரண்டு அற்புதமான கொண்டாட்ட இரவுகளை மிகவும் தாராளமாக ஏற்பாடு செய்து நடத்திக்கொடுத்தார். இது ஒரு நண்பரிடம் இருந்து கிடைத்த அசாதாரணமான தாராள மனப்பான்மையுடன் கூடிய திருமணப் பரிசாகும். இதற்காக நாங்கள் மிகுந்த நன்றியுணர்வுடன் இருந்தோம். இப்போதும் இருக்கிறோம்.

ஒருவர் யார் அல்லது எங்கிருந்து வருகிறார் என்பதற்காக மட்டும் மிகவும் தனிப்பட்ட மற்றும் மகிழ்ச்சியான ஒரு நிகழ்வை அரசியல் அல்லது தீய நோக்கமுடைய ஒன்றாக சித்தரிப்பது துரதிர்ஷ்டவசமானது. நட்புக்கு அரசியல் நோக்கம் தேவையில்லை. தாராள மனப்பான்மையுடன் எப்போதும் ஒரு மறைமுக நோக்கம் இருப்பதில்லை. சில சமயங்களில் திருமணப் பரிசு என்பது வெறும் திருமணப்பரிசாக மட்டுமே இருக்கும்" என்று குறிப்பிட்டு இருந்தார்.

## திமுக முன்னாள் அமைச்சர்கள் இடங்களில் ரைடு நடத்துவது தொடர்பாக கழக அமைப்புச்செயலாளர் ஆர். எஸ். பாரதி அவர்களின் பேட்டி

சென்னை 17, செப்டம்பர் 2026: பட்டப்பகலில் படுகொலை நடக்கிறது. நேற்று மட்டும் ஆறு கொலைகளுக்கு மேல நடந்திருக்கு. அதே போல ஒரு நிகழ்ச்சியில பெண் சிங்கம் படம் ஒன்னு போலீஸ்ல ஆரம்பிச்சிருக்கார்ல. அந்த பெண் போலீசாரிடமே போய் சில மிஷம் செஞ்சிருக்கான் தவெக நிர்வாகி. சாமி ஊர்வளத்தில திருப்பதி கொடை ஊர்வளத்தில பெண் போலீஸ் கிட்டயே போய் தவெககாரன் பாலியல் தொல்லை கொடுக்க கூடிய அளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது. இந்த விஷயம் வெளிய வரவும் காவல்துறை அந்த நபரை கைது செய்தது. ஆனா வுமன் போலீஸ் கிட்டயே மிஸ்பிஹேவ் பண்ண தவெக காரனை விடுதலை செய்துள்ளார்கள். அந்த விடுதலைக்கு பின்னால் யார் இருந்தது.? இதெல்லாம் மக்கள் மத்தியிலே இன்னைக்கு செய்தியா வந்திருக்கு.

அது மட்டுமல்ல எல்லா விலைவாசியும் ஏறி போயிருக்கு திமுக ஆட்சி இருக்கும்போது அரசி ஒரு மூட்டை 1600 ரூ வித்தது. இன்னைக்கு 2200 ஒரு மூட்டைக்கு 600 ரூபா ஏறிருக்கு. அதே மாதிரி பருப்பு ஒரு கிலோ 160 வித்தது இப்போ 190. சர்க்கரை 40 க்குவித்தது 74 ஆகி இருக்குது. ஆக பொதுமக்கள் இன்னைக்கு மிகவும் அதிருப்தியில இருக்காங்க. விலைவாசி ஏறி போச்சு பல இடங்களில் குடிக்கிறது தண்ணி இல்லாம இன்றைக்கு குடிநீர் பிரச்சனை ஏற்பட்டு போச்சு அது மட்டுமல்லாமல் சட்ட ஒழுங்கு கெட்டு போச்சு, மின்வெட்டு இருக்கிறது. சென்னையில் அமைச்சர் செங்கோட்டையன் பேட்டி கொடுக்கும் போதே மின்வெட்டு இதான் அவங்க லட்சணம். மின்துறை அமைச்சர் பேசுற இடத்திலே மின்வெட்டு நடந்திருக்கு. இதை எல்லாம் மறைத்து மக்கள் மத்தியில் இருக்கிற கோபத்தை திசை திருப்புவதற்காக இது போல ரைடு நடத்தி தப்பிக்க நினைக்கிறார்கள். நான் கேக்கறேன் திடீர்னு இப்ப எதுக்கு ரைடு தேர்தல் நேரத்தில இது ஒரு செய்தியா வரனும். தவெக போட்டுள்ள இரண்டு வேட்பாளர்களையும் ஊருக்குள் நுழையக் கூடாது என மக்கள் உணர்ச்சியோட வந்துட்டாங்க. காரணம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு எம். எல். ஏ ஆகிவிட்டு பணத்தை வாங்கி கொண்டு கட்சி மாறியது அயோக்கியத்தனம் கேவலம். ஆகவே அவர்களை தொகுதி மக்களே விரட்டுறாங்க.

மதுராந்தகத்தில, தாராபுரத்தில நாமினேஷன் போட்டுவிட்டு ஊருக்குள் போக முடியவில்லை வீரட்டறாங்க. இதை எல்லாம் திசை திருப்புகிற முயற்சியில் இன்றைக்கு இந்த ரைடு நடத்தியிருக்கிறார்கள். நாங்கள் இதெல்லாம் பார்த்து பழக்கப்பட்டு விட்டோம். எங்க தலைவர இதே டிஏவிசி தான் வந்து கலைஞரை 2001 நல்லிரவுல கைது செஞ்சாங்க. 25 வருஷம் ஆகுது. இதுவரைல ஒரு வழக்கு போட்டாங்களா? முடிஞ்சதா.? ஒரு நாள் செய்தி அது மக்கள் மத்தியில தேர்தல் நேரத்துல பரப்பணும்னு பாக்கறாங்க. இதெல்லாம் மக்கள் வந்து பார்த்து பார்த்து அலுத்து போயிட்டாங்க.

மக்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. போதுமான மின்சாரம் இல்லை. விலைவாசி ஏறி போயிருக்கு, சட்டம் ஒழுங்கு கெட்டு ரோட்டல நடமாட முடியல, பட்டப் பகல்ல வெட்டுறான். இதை சரி செய்யனும்னு தான் மக்கள் எதிர்பார்க்கறாங்க. போலீஸ்கே பாதுகாப்பு இல்லாத ஒரு நிலைமை இந்த ஆட்சியில் இருக்குது. ஆகவே இதை எல்லாம் திசை திருப்பும் முயற்சி இந்த ரைடு.

மக்கள் உணர்ந்து கொண்டார்கள். இந்த மூனு மாசத்தில் நடந்த எல்லாம் பார்த்து செஞ்ச தவறுக்கு வருத்தம் தெரிவிக்கிற வகையில் நல்ல முடிவை வழங்குவார்கள். யூனபதி முக. ஸ்டாலின் அவர்கள் செய்த சாதனை எல்லாம் இப்பதான் எல்லாருக்கும் உணர ஆரம்பிச்சிட்டாங்க, இதற்கெல்லாம் இரண்டு இடைத்தேர்தல நல்ல முடிவை மக்கள் தருவார்கள் நிச்சயமா இரண்டு தொகுதிகளில் திமுக வெற்றி பெறும்.

## திரை விமர்சனம் | 'நல்லபடம்' விமர்சனம்: நகைச்சுவையும் நெகிழ்ச்சியும் நிறைந்த ஒரு கலகலப்பான சமுதாயப் படைப்பு!




சென்னை 17, செப்டம்பர் 2026: இயக்குநர் பிரபுராம் சி, 'நல்லபடம்' படத்தின் மூலம் ஒரு விறுவிறுப்பான மற்றும் பொழுதுபோக்கு நிறைந்த சமூக நாடகத்தைத் தந்துள்ளார். வணிகரீதியான பொழுதுபோக்கு அம்சங்களையும், கூர்மையான சமூகக் கருத்துக்களையும் சம அளவில் கலந்து, மனித உறவுகள் மற்றும் அடிமைத்தனத்தின் விளைவுகளைப் பற்றி ஒரு புதிய கோணத்தில் இப்படம் பேசுகிறது.

இயக்குநர்: பிரபுராம் சி, நடிகர்கள்: டாக்டர் ஏ. ஹரிஷ், தனலட்சுமி, மொட்டை ராஜேந்திரன், கல்கி ராஜா, இசை: சஜிஷ்னா சேவியர், தயாரிப்பு: ஏ அழகு பாண்டியன், பி ஆர் ஓ: சுரேஷ் சந்திரா.

மதுவுக்குக் கடுமையாக அடிமையான குமரனின் (டாக்டர் ஏ. ஹரிஷ்) வாழ்க்கையைச் சுற்றியே 'நல்லபடம்' திரைப்படத்தின் கதை நகர்கிறது. தனது பாசமான தாய், சகோதரி அமுதா மற்றும் காதலி என அனைவரும் தொடர்ந்து நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிய போதிலும், குமரன் தனது குடிப் பழக்கத்தை விட்டு வெளியேற மறுக்கிறார்.

திடீரென நாடு தழுவிய அளவில் மதுவிலக்கு அறிவிக்கப்படும்போது திரைக்கதை அசுர வேகம் எடுக்கிறது. வேறு வழியின்றி மதுவை நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படும் குமரனின் தவிப்பும், அந்தப் புதிய யதார்த்தத்திற்கு அவன் பழக முயற்சிப்பதும் பல சுவாரசியமான, நகைச்சுவையான மற்றும் உணர்வுப்பூர்வமான காட்சிகளாக விரிகிறது. இந்த வித்தியாசமான கதைக்களத்தை இயக்குநர் பிரபுராம் சி மிக நேர்த்தியாகக் கையாண்டு, படத்திற்குத் தேவையான எடையைக் கூட்டியுள்ளார்.

முன்னணி கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் டாக்டர் ஏ. ஹரிஷ், தனது அசாத்தியமான உடல்மொழி மற்றும் நகைச்சுவை நடிப்பு மூலம் படத்தை அலட்டிக்கொள்ளாமல் தாங்கிச் செல்கிறார். அவரது கதாபாத்திர மாற்றக் காட்சிகள் ரசிக்க வைக்கின்றன. அவருக்கு இணையாக நடித்துள்ள தனலட்சுமி, இந்த கலகலப்பான கதையினூடே ஒரு ஆழமான எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தி, படத்திற்குத் தேவையான உணர்வுப் பூர்வமான பலத்தைச் சேர்த்துள்ளார்.

மூத்த நகைச்சுவை நடிகர் மொட்டை ராஜேந்திரன் மற்றும் கல்கி ராஜா ஆகியோரின் வருகை படத்திற்குப் பெரிய பலம். மொட்டை ராஜேந்திரனின் தனித்துவமான உடல்மொழியும், சரியான டைமிங் காமெடிகளும் தியேட்டரைச் சிரிப்பலையில் ஆழ்த்துகின்றன. போதைப் பழக்கம் என்ற கனமான கருப்பொருளைப் படம் பேசினாலும், இவர்களின் நகைச்சுவை அந்த அழுத்தத்தைக் குறைத்து பார்வையாளர்களைத் தொய்வில்லாமல் ரசிக்க வைக்கிறது.

கேமராவிற்குப் பின்னால் இருந்து இயங்கியுள்ள இனியன் ஹாரிஸ், குமரனின் பரபரப்பான உலகத்தை தனது பிரகாசமான மற்றும் துடிப்பான ஒளிப்பதிவின் மூலம் அழகாகப் படம்பிடித்துள்ளார். சஜிஷ்னா சேவியர் இசையமைத்துள்ள பின்னணி இசையும் பாடல்களும் படத்தின் வேகத்திற்கு மிகச் சரியான தூண்டுகோலாக அமைந்துள்ளன. துரத்தல் மற்றும் நகைச்சுவைக் காட்சிகளில் அதிரடி இசையையும், குடும்பக் காட்சிகளில் மென்மையான இசையையும் தந்து கவனிக்க வைக்கிறார்.

நல்லபடம் என்பது அறிவுரை கூறாமல், அதே சமயம் சமுதாயத்திற்குத் தேவையான ஒரு நல்ல கருத்தைச் சொல்லும் ஒரு அரிய சமூக நகைச்சுவைத் திரைப்படமாகும். நிஜ உலகச் சிக்கல்களை எதார்த்தமாகப் பிரதிபலிக்கும் அதே வேளையில், ஒட்டுமொத்தக் குடும்பமும் ரசிக்கும்படியான பொழுதுபோக்குத் திரைப்படமாகவும் இது அமைந்துள்ளது. நல்ல பாடல்கள், சிறந்த நகைச்சுவை மற்றும் ஒரு புதிய கோணத்திலான கதையைத் தேடும் ரசிகர்களுக்கு, இப்படம் தியேட்டரில் பார்க்க வேண்டிய ஒரு நல்ல படைப்பாகும்.

## சவுதி அரேபியாவின் மெக்கா மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை, டிரோன் தாக்குதல்: மக்கள் கடும் பீதி



சென்னை 17, செப்டம்பர் 2026: சவுதி அரேபியாவின் மெக்கா மீது ஏவுகணை, டிரோன் மூலம் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். இதனால் மக்கள் கடும் அச்சத்தில் உறைந்துள்ளனர். அமெரிக்கா-ஈரான் இடையே போர் நீடித்து வருகிறது. இந்த போரில், ஈரானுக்கு ஆதரவாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். சவுதி அரேபியா, வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்காவின் ராணுவ தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த சூழலில், சவுதி அரேபியாவில் உள்ள மெக்கா, ஜெட்டா மற்றும் தைப் உள்ளிட்ட நகரங்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தப்பட கூடும் என சவுதி அரேபிய பாதுகாப்பு படையினர் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இதனால் போலீசார் மற்றும் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டனர்.

இந்த சூழலில், மெக்காவின் தெற்கே ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகளை கொண்டும், டிரோன்களை கொண்டும் நேற்று திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால், மக்களிடையே பரவலாக அச்சம் ஏற்பட்டது. இதனை முன்னிட்டு மக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்கும்படி சவுதி அரசு எச்சரிக்கை விடுத்திருந்தது. எனினும், டிரோன்களையும், கூவுகணைகளையும் சவுதி அரேபிய படையினர், நடு வழியிலேயே சுட்டு வீழ்த்தி விட்டனர் என தகவலை சவுதி ராணுவம் அறிவித்துள்ளது.

இதன்பின்னர் சவுதி அரசு மக்களுக்கு விடுத்திருந்த எச்சரிக்கையை வாபஸ் பெற்று கொண்டது. மத்திய கிழக்கில் போர் தொடங்கியது முதல் இதுவரை முதன்முறையாக மெக்கா நகரை இலக்காக கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு, சவுதி அரேபியாவின் தெற்கு பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 பேர் காயமடைந்தனர். இந்த சூழலில், மீண்டும் சவுதியின் மெக்கா உள்ளிட்ட முக்கிய நகரங்களை இலக்காக கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## "மீனாட்சி அம்மன் கோவில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்புடன் நடைபெறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!" - முதல்வர் விஜய் பதிவு



சென்னை 17, செப்டம்பர் 2026: மீனாட்சி அம்மன் கோவில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்புடன் நடைபெறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்; தமிழர்களின் ஆன்மிகம், கலை, பண்பாடு, கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலையின் பெருமைகளை நூற்றாண்டுகளைக் கடந்து பறைசாற்றி நிற்கும் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 17 ஆண்டுகளுக்குப் பிறகு சிறப்புடன் நடைபெறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழர் பண்பாட்டின் உன்னத அடையாளத்தை உலகிற்கு உணர்த்தும் வகையிலும், நம் மண்ணின் ஆன்மிக மற்றும் வரலாற்றுப் பாரம்பரியத்தின் பெருமையை எடுத்துரைக்கும் வகையிலும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெறும் இந்நன்னாளில், இறைவனின் திருவருள் அனைவரது வாழ்விலும் நிறைந்து, நலமும், வளமும், மகிழ்ச்சியும் பெருகட்டும். நமது தொன்மையான திருக்கோயில்களையும் அவற்றின் வரலாற்றுச் சிறப்பையும் பாதுகாத்து, ஆன்மிக மற்றும் பண்பாட்டுப் பெருமையை வருங்காலத் தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்வோம் என்று குறிப்பிட்டு உள்ளார்.

## ஈரானுக்கு எதிரான போர் நடவடிக்கையில் அமெரிக்காவுக்கு ரூ.2.8 லட்சம் கோடி இழப்பு: நாடாளுமன்றத்தில் அமெரிக்க பாதுகாப்பு துறை தாக்கல் செய்த அறிக்கையால் பரபரப்பு

சென்னை 17, செப்டம்பர் 2026: ஈரானுக்கு எதிரான போர் நடவடிக்கையில் அமெரிக்காவுக்கு ரூ.2.8 லட்சம் கோடிக்கும் மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் அமெரிக்க பாதுகாப்பு துறை தாக்கல் செய்த ஒரு அறிக்கையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ஈரான், அமெரிக்கா இடையே நடந்து வரும் போர் 6 மாதங்களாக நீடித்து வருகிறது. பாகிஸ்தான், கத்தார் நாடுகளின் மத்தியஸ்தத்தால் இரு நாடுகள் இடையே இடைக்கால அமைதி ஒப்பந்தம் கையொப்பமானது. இதனால் 2 மாதங்களுக்கு அமைதி நிலவியது. எனினும் ஒப்பந்தத்தை இரு நாடுகளும் புதுப்பிக்காததால் மீண்டும் போர் தொடங்கியுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளது. இந்நிலையில், ஈரான் மீது ஏன்தான் போர் தொடுத்தோமோ என்ற நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது. எதற்காக என்றால் இந்த போரில் 4 மாதத்தில் மட்டும் அமெரிக்கா மிகப்பெரிய அளவுக்கு செலவு செய்திருக்கிறது. இதனால அந்நாட்டுக்கு பெரிய தலைவலி ஏற்பட்டுள்ளது.

அதாவது, அமெரிக்க பாதுகாப்பு துறையின் தலைமை ஆய்வாளர், நாடாளுமன்றத்தில் அதிகாரப்பூர்வமாக ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளத்தார். அதில், கடந்த பிப்ரவரி 28ம் தேதி தொடங்கி ஜூன் 30ம் தேதி வரை என 4 மாதத்தில் ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையில் அமெரிக்கா ரூ.2.8 லட்சம் கோடிக்கு மேல் இழந்திருக்கிறது என்பது தெரிய வந்திருக்கிறது. தமிழகத்தின் ஆண்டு பட்ஜெட் ரூ.4.4 லட்சம் கோடி. அதாவது, அமெரிக்கா இழந்த பணத்தை வைத்து 6 மாதங்களுக்கு பட்ஜெட் போட முடியும். அமெரிக்காவின் மொத்த இழப்பில், பெரும்பகுதி ஏவுகணைகள் மற்றும் வெடிமருந்துகளை பயன்படுத்துவதற்கே செலவாகியிருக்கிறது. போர்க்களத்தில் இழந்த மற்றும் சேதமடைந்த ராணுவ உபகரணங்களின் மதிப்பு மட்டும் பல ஆயிரம் கோடியாகும்.

ஈரானின் ஏவுகணைகள், டிரோன் தாக்குதல்களால், அமெரிக்காவின் பல அதிநவீன போர் விமானங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. சில விமானங்கள் பலத்த சேதம் அடைந்திருக்கின்றன.

டிரோன்களில் அமெரிக்காவின் எம்கியூ-9 ரீப்பர் ட்ரோன்கள் ஒவ்வொன்றும் சுமார் ரூ.250 கோடியாகும். மொத்தம் 30 டிரோன் அழித்திருக்கிறது. போர் விமானங்களில் எப்-15இ ரக போர் விமானங்களில் 4, எப்-35ஏ ரக விமானம் ஒன்று, ஏ-10 ரக விமானம் ஒன்று சேதமடைந்திருக்கின்றன. தவிர, வான்வழியில் எரிபொருளை நிரப்பும் கேசி-135 விமானங்கள் 7 சேதமடைந்திருக்கின்றன. இதில் 5 விமானங்கள் சவுதியில் தரையிறங்கியபோது தாக்குதலுக்கு உள்ளாகின. மேலும், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்களில் இருந்த நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் ஈரானிய ஏவுகணை தாக்குதல்களால் தரைமட்டமாக்கப்பட்டு இருக்கின்றன.

பஹ்ரைனில் உள்ள அமெரிக்க கடற்படையின் முதன்மை தளவாட மையம் ஈரானின் பாலிஸ்டிக் ஏவுகணைகளால் கடுமையாக தாக்கப்பட்டது. ஈராக், குவைத், சவுதி மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 4 நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் கடுமையாக சேதமடைந்திருக்கின்றன. இதை சரி செய்ய ரூ.1,540.5 கோடி தேவைப்படும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முக்கியமான விஷயங்களில் ஒன்றாக அமெரிக்காவின் அதிநவீன துல்லிய ஏவுகணைகள் வேகமாக காலியாகி விட்டதாம். அதனால், ஆயுத பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. போரில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை மறு உற்பத்தி செய்ய அமெரிக்கா உடனடியாக உத்தரவிட்டிருக்கிறது.

அதிபர் டிரம்ப், 'ஆயுத பற்றாக்குறை எதுவும் இல்லை' என்று கூறி வந்தாலும் பென்டகனின் இந்த அறிக்கை உண்மையை வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கிறது. அமெரிக்க நாடாளு மன்ற வரவு-செலவு அலுவலகம் வெளியிட்டிருக்கும் இன்னொரு அறிக்கையில், போர் நீடித்தால் அமெரிக்காவில் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்